செய்தி வெளியீடு எண்: 56-2019 நாள்: 30.12.2019

**விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டத்திற்குட்பட்ட வீடூர் அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார்.**

*****

இன்று (30.12.2019) விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டத்திற்குட்பட்ட வீடூர் அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, இன்றைய தினம் திண்டிவனம் வட்டம் வீடூர் அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் வீடூர் நீர்த்தேக்க திட்டம், வராகநதி மற்றும் தொண்டியாறு ஒன்றுசேரும் இடத்தில் 1958-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1959-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

வராகநதி மற்றும் தொண்டியாறு முறையே செஞ்சி வட்டம், பாக்கம் மலைத்தொடரிலிருந்தும், தொண்டூர் ஏரியிலிருந்தும் உற்பத்தியாகி வீடூர் அணையில் ஒன்று சேர்ந்த பிறகு, அணையிலிருந்து சங்கராபரணி நதியாக புதுச்சேரியின் அருகே வங்கக்கடலில் கலக்கிறது. இவ்விரு நதிகளும் வடகிழக்கு பருவமழை காலங்களில் நீரோட்டம் பெறுகிறது.

வீடூர் அணையின் மொத்த நீளம் 4500 மீட்டர், உயரம் 32 அடி மற்றும் கொள்ளளவு 605 மில்லியன் கன அடிகள். வீடூர் அணையின் பிரதான கால்வாயின் நீளம் 17.640 கி.மீ. மற்றும் 5 கிளை கால்வாய்கள் மூலம் தமிழ்நாட்டில் 2200 ஏக்கர் மற்றும் புதுவை மாநிலத்தில் 1000 ஏக்கர் என மொத்தம் 3200 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

வீடூர் அணையிலிருந்து ஒருபோக பாசனத்திற்கு போதிய அளவு தண்ணீர் இருக்கும் தருவாயில் டிசம்பர் 30.12.2019 முதல் மே 12.05.2020 ஆம் தேதி வரை 135 நாட்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

வீடூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரானது தமிழக பகுதியான சிறுவை, பொம்பூர், பொன்னம்பூண்டி, கோரக்கேனி, ஐவேலி, நெமிலி, ஏறையூர், தொள்ளமூர், கடகம்பட்டு, கொண்டலாங்குப்பம் ஆகிய கிராமங்களில் உள்ள 3200 ஏக்கர் விசவசாய நிலங்களும் மற்றும் புதுச்சேரி பகுதியில் 1000 ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெற்று விவசாயிகள் இதன் மூலம் பயனடைவார்கள்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.சக்ரபாணி (வானூர்), டாக்டர் இரா.மாசிலாமணி (மயிலம்), திண்டிவனம் சார் ஆட்சியர் டாக்டர்.எஸ்.அனு.இ.ஆ.ப., பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ) திரு.ஜவகர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.